# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூன் – 2018**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காப்பியம் என்றால் என்ன?
2. சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த நாடுகள் எவை?
3. பாரதிதாசன் எழுதிய இரு காப்பியங்களின் பெயரினை எழுதுக.
4. இந்திரவிழா எத்தனை நாட்கள் நடைபெற்றது?
5. சீவகசிந்தாமணியின் முதல் நூல்கள் யாவை?
6. சீவகனின் தாய்மாமன் யார்?
7. குகன் இராமனிடம் படைத்த பொருட்கள் யாவை?
8. தமிழச்சிக் காவியம் உருவான விதம் பற்றிக் குறிப்பிடுக.
9. முச்சங்கங்கள் பற்றி விரிவாக கூறிய நூல் எது?
10. கலிப்பா யாப்பில் அமைந்த எட்டுத்தொகை நூல் எது?
11. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக அமைந்த நூல் எது?
12. களவு ஒழுக்கத்தின் நான்கு வகைகளை எழுதுக.
13. புறத்திணைகள் ஏழினைக் குறிப்பிடுக.
14. வள்ளைப்பாட்டு என்றால் என்ன?
15. நிலத்தினும் பெரிதே எனும் பாடலை பாடியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. கோப்பெருந்தேவியின் கனவினை எழுதுக.
2. முரசறைவோன் வாழ்த்திய மரபு பற்றிக் குறிப்பிடுக.
3. திண்ணனாரின் தோற்றச் சிறப்பை எழுதுக.
4. பாஞ்சாலி சபதத்தின் சகுனியின் சதியை எழுதுக.
5. முச்சங்கங்கள் பற்றி எழுதுக.
6. அன்பின் ஐந்திணைப் பற்றி எழுதுக.
7. புறத்திணை வெண்பாமாலை கூறும் புறத்திணை எத்தனை? அவை யாவை?
8. ஆற்றுப்படை இலக்கியத்தில் இடைவழியில் சந்திக்கும் கலைஞர்கள் எவ்விதம் காட்சியளிப்பர்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்ததை நாடகமாக்குக.

(அல்லது)

(ஆ) திண்ணப்பர் கண்ணப்பரானதை விளக்குக.

2. (அ) வீரத்தாய் காவியத்தில் விஜயராணியின் தாய்மை உணர்வையும் வீர உணர்வையும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை பாடல்களின் சிறப்பினை விவரிக்க.

3. (அ) சங்க இலக்கியத்தில் அகத்திணை பாகுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றின் வழி அறியலாகும் தமிழ் மக்கள் வாழ்க்கை நிலையை கட்டுரைக்க.

*** *